

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12–2–2025) சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் சார்பில் நடைபெற்ற அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் இல்லக் குழந்தைகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்று வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பதக்கங்களை அணிவித்து பரிசுக்கோப்பை மற்றும் சான்றிதழைகளை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் பி. கீதா ஜீவன், பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் ஜெயஸ்ரீ முரளீதரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.2.2025) சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் சார்பில் நடைபெற்ற அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் இல்ல குழந்தைகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழாவில் இல்லக்குழந்தைகள் வரைந்த ஓவியங்கள் மற்றும் கதைகள் இடம் பெற்ற ”இருட்டில் ஒளிரும் மின்மினிப்பூச்சிகள் என்ற சிறார் கதை புத்தகத்தை வெளியிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் திருமதி. பி. கீதா ஜீவன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.2.2025) சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் சார்பில் நடைபெற்ற அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் இல்ல குழந்தைகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் ஒட்டுமொத்த வெற்றி பெற்ற தட்டப்பாறை (தூத்துக்குடி) மண்டலத்திற்கு பரிசுக் கோப்பையை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சகள்ர் பி. கீதா ஜீவன், பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அரசு செயலாளர் ஜெயஸ்ரீ முரளீதரன், மற்றும் அரசு அலுவலர்கள், இல்லக் குழந்தைகள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.2.2025) சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் சார்பில் நடைபெற்ற அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் இல்லக் குழந்தைகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்று வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பதக்கங்களை அணிவித்து பரிசுக்கோப்பை மற்றும் சான்றிதழைகளை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் திருமதி. பி. கீதா ஜீவன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை சார்பில் நடந்த

# மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு -பதக்கங்கள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, பிப். 14 -

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் சார்பில் நடைபெற்ற அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் இல்ல குழந்தை களுக் கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் ஒட்டுமொத்த வெற்றி பெற்ற தட்டப் பாறை (தூத்துக்குடி) மண்டலத்திற்கு பரிசுக் கோப்பைகளையும், அதிக புள்ளி கள் பெற்று வெற்றி பெற்ற குழந்தை களுக்கு பதக்கம் அணிவித்து பரிசுக் கோப்பை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.2.2025) சென்னை, ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் குழந்தை கள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் சார்பில் நடைபெற்ற அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் இல்ல குழந்தைகளுக்கான மாநில அளவி லான விளையாட்டுப் போட்டிகள் மற் றும் கலை நிகழ்ச்சிகளில் ஒட்டுமொத்த வெற்றி பெற்ற தட்டப்பாறை (தூத்துக் குடி) மண்டலத்திற்கு பரிசுக் கோப்பை களையும், அதிக புள்ளிகள் பெற்று வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பதக் கம் அணிவித்து பரிசுக்கோப்பை மற் றும் சான்றிதழ்களை வழங்கினார்.

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் இளைஞர் நீதி (குழந் தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015இன் கீழ் அனுமதிக்கப்ப டும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளின் மறு வாழ்விற்காக பராமரிப்பு, பாதுகாப்பு, கல்வி, சிகிச்சை மற்றும் தொழிற்கல்வி ஆகியவை அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடுஅரசின்முன்முயற்சியாக குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் இயங்கும் 36 அரசு மற்றும் 147 அரசு நிதி உதவி பெறும் தன்னார்வ தொண்டு நிறுவ னங்களில் உள்ள குழந்தைகளின் திற மைகளைக் கண்டறிந்து அவர்களை ஊக்குவிக்க மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்திட ரூ 25,00,000/ நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்திட ஏதுவாக தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களும் சென்னை, இரா ணிப்பேட்டை, தஞ்சாவூர், தட்டப் பாறை (தூத்துக்குடி) என நான்கு மண் டலங்களாக பிரிக்கப்பட்டு விளை யாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

மண்டல அளவிலான விளை யாட் டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சி களில் ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டு தல், குண்டு எறிதல் உள்ளிட்ட தனிநபர் பிரிவு போட்டிகளும் கைப்பந்து, கபடி, பூப்பந்து உள்ளிட்ட குழு விளையாட்டு போட்டிகளும் சிறுவர் மற்றும் சிறுமி யர்களுக்கு தனித்தனியே நடத்தப்பட் டன. மேலும் பேச்சு, பாடல், ஓவியம் மற்றும் நடனம் ஆகிய கலைநிகழ்ச்சி களும் நடத்தப்பட்டன. சென்னை மண்டல அளவிலான போட்டிகளில் 36 இல்லங்களிலிருந்து 764 குழந் தைகளும், இராணிப்பேட்டை மண் டல அளவிலான போட்டிகளில் 37 இல் லங்களிலிருந்து 927 குழந்தைகளும், தஞ்சாவூர் மண்டல அளவிலான போட் டிகளில் 57 இல்லங்களிலிருந்து 1022 குழந்தைகளும், தட்டப்பாறை (தூத் துக்குடி) மண்டல அளவிலான போட்டி களில் 39 இல்லங்களிலிருந்து 736 குழந்தைகளும் என மொத்தம் 169 இல்லங்களைச் சேர்ந்த 3,449 குழந் தைகள் கலந்து கொண்டனர்.

மண்டல அளவிலான போட்டிகளில் பங்கு பெற்று முதல் இரண்டு இடங்க ளைப் பிடித்த மொத்தம் 488 குழந்தை கள் மற்றும் 150 இல்லப் பணியாளர்க ளுக்கு சென்னை, ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கில் 11.2.2025, 12.2.2025 ஆகிய நாட்களில் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டி கள் மற்றும் கலைநிகழ்ச்சிகளில் நடத் தப்பட்டன.

இந்த போட்டிகளில் 14 வயதிற்குட் பட்ட சிறுவர் பிரிவில் அதிக புள்ளிகள் பெற்று வெற்றி பெற்ற சென்னை மண் டலத்தைச் சேர்ந்த சிறுவன் A.அபி ஷேக் ராஜ், 14 வயதிற்குட்பட்ட சிறுமி கள் பிரிவில் அதிக புள்ளிகள் பெற்று வெற்றி பெற்ற தஞ்சாவூர் மண்டலத் தைச் சேர்ந்த சிறுமி ஆர்.ஆஷா ஆகி யோர் தனிநபர் சாம்பியன் பட்டம் வென் றனர்.

இந்த போட்டிகளில் 14 - 18 வயதிற் குட்பட்ட சிறுவர் பிரிவில் அதிக புள்ளி கள் பெற்று வெற்றி பெற்ற தஞ்சாவூர் மண்டலத்தை சேர்ந்த சிறுவன் ஆர். கிஷோர், 18 வயதிற்குட்பட்ட சிறுமிகள் பிரிவில் அதிக புள்ளிகள் பெற்று வெற்றி பெற்ற தட்டப்பாறை மண்டலத்தைச் சேர்ந்த சிறுமி பி.பிரியதர்ஷினி ஆகி யோர் தனிநபர் சாம்பியன் பட்டம் வென்றனர்.

மாநில அளவில் நடைபெற்ற விளை யாட்டுப் போட்டிகள் மற்றும் கலைநி கழ்ச்சிகளில் அதிக புள்ளிகள் பெற்று தட்டப்பாறை (தூத்துக்குடி) மண்டலம் முதலிடம் பெற்று பரிசுக் கோப்பை களை வென்றது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் திரு மதி. பி. கீதா ஜீவன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அரசு செயலாளர் ஜெயஸ்ரீ முரளீதரன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் நன் கொடையாளர்கள், அலுவலர்கள், இல் லக் குழந்தைகள் கலந்து கொண்டனர்.

### முத்துப்பேட்டை ஒன்றிய அவைத்தலைவர்

# மறைந்த நா.முத்துராமலிங்கம் நினைவேந்தல்!

## பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள்!

*திருவாரூர், பிப்.14-*

*திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஒன்றிய அவைத்தலைவர் மறைந்த நா.முத்துராமலிங்கம் அவர் களின் முதலாமாண்டு நினைவு நாளை முன்னிட்டு முத்துப்பேட்டை ஒன்றியக் கழகம் சார்பில் வேப்பஞ்சே ரியில் அரசு விதிகளின்படி அமைக்கப்பட்ட கொடிமே டையில் கழகக் கொடியேற் றப்பட்டு நலத்திட்ட உதவி கள் வழங்கப்பட்டது.*

*முத்துப்பேட்டை ஒன் றிய செயலாளர் இரா. மனோகரன் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வுகளில் மறைந்த நா.முத்துராமலிங்கம் அவர் களின் திருவுருவப் படத் திற்கு மலர்மாலை அணி வித்து மரியாதை செலுத்தப் பட்டது. அதனை தொடர்ந்து அரசு தொடக்கப்பப்பள்ளி மாணவ - மாணவியருக்கு கல்வி உபகரணங்கள் வழங் கப்பட்டது.*

*ஒன்றியச் செயலாளர் இரா.மனோகரன் தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் மாவட்ட விவ சாய தொழிலாளர் அணி அமைப்பாளர் அன்பழகன், ஒன்றிய துணைச் செயலா ளர் முத்துலெட்சுமி சிவா, முன்னாள் ஊராட்சி தலை வர் ராச. ரவிச்சந்திரன், பாண்டி சங்கர், ரா.முத்துக் குமார், முத்துகிருஷ்ண ராஜா, முன்னாள் ஊராட்சி துணைத் தலைவர் முரு கேஷ், சந்துரு, ராஜா, கரு ணாநிதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழக தோழர் கள் கலந்து கொண்டனர்.*

*நிகழ்வுகளை வேப்பஞ் சேரி கிளைச்செயலாளர் முத்து. தமிழழகன் மற்றும் மறைந்த நா. முத்துராம லிங் கம் அவர்களின் குடும்பத்தி னர் ஒருங்கிணைத்து நடத் தினர்.*



சேலம் மாவட்டம் ஆத்தூர் அடுத்த பைத்தூர் வழியாக தவளைப்பட்டிக்கு நகர பேருந்து சென்று கொண்டிருந்தது. அப்போது பஸ் டிரைவர் கவன குறைவால் பஸ் 20 அடி பள்ளத்தில் விழுந்தது. இதில் பயணம் செய்த 8 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த தகவல் அறிந்ததும் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் படுகாயம் அடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறினார். மேலும் மருத்துவர்களிடம் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார். அப்போது ஒன்றிய செயலாளர் டாக்டர் வே. செழியன், நகர செயலாளர் பாலசுப்பிரமணியம், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மற்றும் திமுக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!

*தருமபுரி, பிப். 14-*

*தருமபுரி மேற்கு மாவட் டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*தருமபுரி மேற்கு மாவட் டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாளை (15.02.2025 - சனிக்கிழமை) மதியம் 3.00 மணியளவில் காரிமங்கலம், மாவட்டக் கழக அலுவல கத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் - முன் னாள் எம்.எல்.ஏ. கே.மனோ கரன் தலைமையிலும், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆ.மணி முன்னிலையிலும் நடைபெறும்.*

*அதுசமயம், மாநில, மாவட்டக் கழக நிர்வாகி களும், தலைமைச் செயற் குழு உறுப்பினர்களும், பொதுக்குழு உறுப்பினர்க ளும், ஒன்றியக் கழகச் செய லாளர்களும், பேரூர் கழக செயலாளர்களும், மற்றும் சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்களும் அனை வரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள்:*

*மார்ச் 01 கழகத் தலை*



*வர் - தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும், பேரூ ராட்சிக்கு உட்பட்ட வார் டுகளிலும் நலத்திட்ட உதவி கள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது,*

*2019ல் தொடங்கி தொடர்ந்து தேர்தல் களத் தில் வெற்றி வீரராய் விளங்கி கொண்டிருக்கும் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக் கும், அவர்களின் 200 தொகுதி களின் இலக்கு, அதனை தொடங்கி வைத்த ஈரோடு கிழக்கு, சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக் கும் நன்றி தெரிவித்து தீர்மா னம் நிறைவேற்றுதல் மற் றும் கழக வளர்ச்சிப்பணி கள்,*

*தமிழ்நாட்டை தொடர்ந்து புறக்கணிக்கும் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து தீர்மானம் மற் றும் தெருமுனைக் கூட்டங் கள் நடத்துவது ஆகியன தொடர்பாக.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தெரிவித் துள்ளார்.*





திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சி என்.சி.பி. மேல்நிலைப் பள்ளியில் 2024–2025 ஆண்டு +2 மற்றும் 10 வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மணி யோகேஷ், பசுபதி ஆகியோருக்கு தலா 2 கிராம் தங்க மோதிரத்தை நகர்மன்றத் தலைவர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கு.பாப்பு கண்ணன் வழங்கினார். இதில் அரிமா தலைவர் கோபாலகிருஷ்ணன், ஆசிரியர் – பெற்றோர் கழகம், 6 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் முபாரக் அலி, செந்தில்குமார், பள்ளி மேலாண்மை குழுத்தலைவர் பர்கத் நிஷா, பள்ளி தலைமை ஆசிரியர் தமிழ்ச்செல்வன், துணை தலைமை ஆசிரியர் சிவன்மலை உள்பட ஆசிரியர்கள், பெற்றோர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் பலர் உள்ளனர்.